செய்தி வெளியீடு எண்:103 நாள்: 22.02.2017

## செய்தி வெளியீடு

## இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் பணி புரியும் அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமச்சந்திரன் பாராட்டு

அறநெறியையும், ஆன்மீக உணர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும் வளர்ப்பதோடு மட்டுமன்றி, புகழ்வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் பொக்கிஷங்களாகவும் விளங்கும் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்வது, அன்றாட பூஜைகள் தங்குதடையின்றி நடப்பதை உறுதி செய்வது, ஆக்கிரமிப்பில் உள்ள திருக்கோயில்களின் சொத்துக்களை மீட்டு அவற்றின் வருவாயை பெருக்குவது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை ஒருங்கிணைத்து நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார்களுக்கும் அனுபவம் வாய்ந்தவர்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்க உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி முதற்கட்டமாக 13.02.2017 முதல் 10.03.2017 முடிய நான்கு வாரகால திறன் மேம்பாட்டு பயிற்சி 11 இணை ஆணையர் மண்டல தலைமையிடங்களில் நடைபெற்று வருகிறது.

சென்னையில் வடபழநி அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் அர்ச்சகர்களுக்கும், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் ஓதுவார்களுக்கும், பெசன்ட்நகர் அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயிலில் பட்டாச்சாரியார்களுக்கும், திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் அர்ச்சகர்களுக்கும் (20.02.2017முதல் நான்கு வாரத்திற்கு), திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இன்று (22.02.2017) வடபழநி அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் அர்ச்சகர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்று வருவதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முகமணி அவர்களும் பார்வையிட்டு பயிற்சி பெற்று வருபவர்களை ஊக்கப்படுத்தி பாராட்டுகளை தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியின் போது சென்னை மண்டல இணை ஆணையர் திரு.அ.தி.பரஞ்ஜோதி, வடபழநி, துணை ஆணையர்/செயல் அலுவலர் திரு.ச.சிவகுமார் ஆகியோர் உடனிருந்தார்கள். வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் அர்ச்சகர்களுக்கு நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சியில் மைலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் குருக்கள் திரு.கே.கபாலி குருக்கள் அவர்கள் வேதம், ஆகமம், சைவ சித்தாந்தம், சில்பசாஸ்திரம், திருமுறை குறித்து விளக்க அளித்தார்.

மேலும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் ஓதுவார்களுக்கும், பெசன்ட்நகர் அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயிலில் பட்டாச்சாரியார்களுக்கும், திருவொற்றியூர் அருள்மிகு தட்சிணாமூர்த்தி சுவாமி திருக்கோயிலில் அர்ச்சகர்களுக்கும் (20.02.2017முதல் நான்கு வாரத்திற்கு), திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு பயிற்சி பெற்றவர்களை ஊக்கப்படுத்தி அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

இப்பயிற்சியில் திருக்கோயில்களில் பணி புரியும் அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார்களுக்கு திறமை வாய்ந்த பயிற்றுனர்கள் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்காக ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சியின் போது, திருஞானசம்பந்தர் அற்புத பதிகம் விளக்கம், திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள், அற்புதங்கள், 11ம் திருமுறை, திருப்புகழ், பிள்ளைத்தமிழ், கொடிக்கவி குறித்த சைவ சித்தாந்த விளக்கமளிக்கப்படும். மேலும், கணபதி உபநிஷம், திருமுறைகள், மந்திர புஷ்பம், மங்கள சுலோகங்கள் பயன்பாடு குறித்தும் பயிற்சியளிக்கப்படும்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.2,000/– வழங்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ளும் அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார்களுக்கு பயிற்சி முடிந்த பின் திறனாய்வு செய்து சான்றிதழ் வழங்கப்படும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**